# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1949/12 - 2016 ජනවාරි මස 11 වැනි සඳුදා - 2016.01.11

*1949/12 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (எதிர்நேர் விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்ந்து வாசிக்கப்படவேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 272 (38) ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டிற்கு அமைய நீர்கொழும்பு மாநகர சபையினால் இயற்றப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (எதிர்நேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள 2009, ஒற்றோபர் 07 ஆந் திகதிய 1622/21 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள நீர்கொழும்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள தனியார் சந்தைகளை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல், நிர்வகித்தல் அத்துடன் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதி, நீர்கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் மாநகர சபையின் ஊடாக நிர்வகிக்கப்படும் வீதிகளில் பல்வேறு அரச/பகுதி அரச/கூட்டுத்தாபனம் /சபை/ அமைப்பகம் மற்றும் தனிப்பட்டவர்களினால் நீர் குழாய்களைப் பதித்தல் மற்றும் நிலத்திற்கு அடிப்பகுதியில் கம்பிகளை இழுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான துணைவிதி மற்றும் நீர்கொழும்பு மாநகர பல்வேறு அரச/பகுதி அரச/கூட்டுத்தாபனம்/சபை/அமைப்பகம் மற்றும் தனிப்பட்டவர்களினால் நிர்மாணிக்கப்படும் வாய்க்கால் மற்றும் தூண்களைப் பொருத்துதல் போன்ற பணிகளை கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதி, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (எதிர்நேர் விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (252 ஆம் அதிகாரமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 268 ஆவது பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி மேல் மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.*

இசுர தேவப்பிரிய,
முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை,
சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண
நிர்வாகம், பொருளாதார அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் எரிசக்தி,
சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு
மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண முதலமைச்சு,
சிராவஸ்த்தி வளாகம்,
கொழும்பு 07,
2016, சனவரி 05.

*1- 930*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*